**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**அசல் வழக்கு எண்.756/2019**

PW - 1

2023 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் புதன்கிழமை (1989 ஆம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ராஜசேகர், பி.காம்., பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | எஸ்.சதீஷ்கௌதம் |
| தந்தை பெயர் | வி.செல்வராஜு |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாகத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேலும் எனது சாட்சியத்தை உறுதிபடுத்துவதற்காக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 13-09-2017 தேதியிட்ட கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1, 15-09-2017 தேதியிட்ட அனுமதி கடிதம் வா.சா.ஆ.2, 15-09-2017 தேதியிட்ட கடன் ஒப்பந்தம் வா.சா.ஆ.3, 15-09-2017 தேதியிட்ட கடனுறுதிச் சீட்டு வா.சா.ஆ.4, 15-09-2017 தேதியிட்ட ஓவர்டிராப்ட் பெசிலிட்டி வா.சா.ஆ.5, கணக்கு பட்டியல் வா.சா.ஆ.6, என்னுடைய அடையாள அட்டையின் புகைப்பட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியிடப்படுகிறது (வா.சா.ஆ.7 அசலோடு ஒப்பீடு செய்து குறியிடப்படுகிறது.) தாவாப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :** இல்லை

ஒம்/எஸ்.சதீஷ்கௌதம்,

ஒம்/கே.ராஜசேகர்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.